**OS.NO: 80/2024**

**PW 1 :சிவகுரு த/பெ.ராமசாமி**

நாள் : 11.03.2026.

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

தாவா தாக்கல் செய்யும் போது பிராதில் பத்தி 4ல் சில நபர்கள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வருவதாக கூறுயுள்ளேனா என்றால் சரிதான்.

பிராதில் சுவாதினம் கோரி எந்த பரிகாரமும் கோரவில்லை என்று சொன்னால் சரிதான். பிராதில் நான் எந்த எந்த நபர்கள் அத்துமீறி அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரத்தை நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

நான் தாவா கிராமத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். ஆகையால் தாவா சொத்து விவரங்கள் கூட எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

எனது தரப்பில் குறியீடு செய்த பள்ளி மாற்று சான்றிதழில் உள்ள பள்ளி தற்போது இயங்கி வருகிறதா என்றால் இயங்கி வருகிறது. பள்ளியில் பிறப்பு சான்றிதழ் பெற்று தான் சேர்ப்பார்கள் என்று சொன்னால் சரிதான் அது போல் தான் என்னையும் சேர்த்தார்கள்.

அதனால் என்னுடைய பிறப்பு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் என்னுடைய உண்மையான வயது என்ன என்பது தெரிய வரும் என்று சொன்னால் சரிதான்.

நான் என்னுடைய பிறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் என்னுடைய உண்மையான வயது தெரிய வரும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வளாகத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் எனக்கு வழக்குகள் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

இதே நீதிமன்றத்தில் வேறொரு வழக்கும் சார்பு நீதிமன்றத்திலும் உரிமையியல் நீதிமன்றத்திலும் வழக்கு நிலுவையில் உள்ளது. ஆரம்ப காலம் முதல் நான் ஒரு வழக்காடி என்று சொன்னால் சரிதான்.

எனக்கு உயில் மூலமாக சொத்து கிடைத்ததாக கூறியுள்ளேன். அந்த விவரத்தை எனது தந்தை எப்போது என்னிடம் கூறினார் என்றால் 2006ம் ஆண்டில் தான் உயில் பற்றி எனக்கு தெரியும்.

தாவா சொத்துக்கள் 2006க்கு முன்பே பாராதீனம் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2006க்கு பிறகாவது நான் தாவா சொத்துக்கள் குறித்து வருவாய் துறையில் சென்று ஆவணங்களை பரிசீலனை செய்தேனா என்றால் இல்லை.

2006 லிருந்து 2024 வரை தாவா சொத்து குறித்த விவரத்தை நான்

தெரிந்து கொள்ளவில்லை என்று பிராதில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் 1988ல் மேஜர் ஆனேன்.

2006ல் நான் தாவா சொத்துக்களை பற்றி தெரிந்து கொண்ட பிறகு 3 ஆண்டுகளுக்குள் என்ன நடவடிக்ககை மேற்கொண்டேன் என்றால் அசல் உயிலை எனது அப்பா அரக்கோணம் பாரத வங்கியில் பயிர்க்கு அடமானம் வைத்து பயிர் கடன் வாங்கியிருந்தார். அந்த விவரம் எனக்கு 2008ம் ஆண்டு தான் தெரியவந்தது.

அடமான கடனை வங்கியில் திரும்பி செலுத்துவிட்டோமா என்றால் பாதி செலுத்திவிட்டோம். நான் வங்கிக்கு எதிராக தாவா சொத்துக்கள் குறித்து நடவடிக்கை ஏதாவது எடுத்தேனா என்றால் இல்லை. எனது தந்தை 2002ம் ஆண்டு இறந்தார். மேற்படி வங்கியிலிருந்து எனது தந்தைக்கு கடன் இருப்பதாக கூறி அறிவிப்பு ஏதாவது வந்ததா என்றால் 2010ல் வந்தது.

2010ம் ஆண்டிலேயே நான் உயில் ஆவணத்தின் நகலை வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டேன். அதன் பிறகாவது நான் தாவா சொத்துக்கள் குறித்து நடவடிக்கை ஏதாவது மேற்கொண்டேனா என்றால் குடும்ப சூழ்நிலை காரணமாக நான் வழக்கு சொத்துக்களிடம் வரவில்லை.

நான் தாமதமாக இந்த வழக்கை தாக்கால் செய்வதற்கு காரணம் குடும்ப பிரச்சனை தான் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை அளந்தது குறித்து ஆதாரம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் பார்த்த கிரைய ஆவணத்தில் யார் பெயரில் கிரையம் கொடுத்ததாக உள்ளது என்றால் என் பெயர் உள்ளது. இன்றைய தேதி வரை என் பெயரிலுள்ள கிரைய ஆவணங்களை ரத்து செய்ய கோரி பரிகாரம் கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

தாவா சொத்துக்களில் 'அ' அட்டவணை சொத்து மனைபிரிவுகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யபட்டது. 'ஆ' அட்டவணை சொத்தில் ஒரு பகுதியான 30 சென்ட்டை தான் 7ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றும் ஆதலால் சந்தை மதிப்பின் படி தாவா சொத்துக்களுக்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை.

7ம் பிரதிவாதி அவர் பெயரில் வாங்கிய 30 சென்ட்க்கு அவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஆகையால் 7ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் நான் கோரவில்லை என்று சொன்னால் சரிதான்.

2006க்கு பிறகாவது தாவா சொத்துக்களுக்கு நான் எனது பெயரில் பட்டா பெறுவதற்கு முயற்சி செய்தேனா என்றால் இல்லை. கிரையம் பெற்றவர்கள் அனைவருக்கும் எதிராக நான் ஆட்சேபனை மனு எதையும் இது நாள் வரை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

சொத்து விவரத்தை மனைபிரிவுகளாக பிரிக்கப்பட்டதை விவரித்து கூறவில்லை என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே எனது தந்தைக்கு உரிமை இல்லாத சொத்தை அடமானம் வைத்ததாக தவறுதலாக நான் கூறுகூதால் எனது தந்தை தவறான தேதியை குறிபிட்டு என்னை பள்ளியில் சேர்த்திருக்க

வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரியல்ல.

ஆகையால் என்னுடைய பிறப்பு சான்றிதழை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை விவரம் தெரிய வரும் என்பதால் நான் அதனை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் பிறப்பு சான்றிதழ் என் வசம் இல்லை.

ஆதார் கார்ட்டை நான் என்னுடைய பிறப்பு சான்றிதழை காண்பித்து வாங்கினேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிகளை ஏமாற்றுவதற்காக தாவா சொத்துக்கள் பற்றி விவரம் அனைத்தும் தெரிந்து இருந்தும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டது என்றும் அதனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.11 19:25:32 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.